செய்தி – திரிவாதி சுபாவின் எழுத்தருக்கு என்றும் நிலை பேறுடைய மகாராஜா ராஜஸ்ரீ துளஜா ராஜே அவர்கள் சுஹூர் அண்டு 1783 இல் எழுதுவதன் காரணமாவது அரண்மனை தொடர்பான இனாம் – காஞ்சி வீரராகவ தீட்சிதரின் பேரனும் பங்காரு தீட்சிதரின் மகனுமாகிய சித்தாந்த வீரராகவ தீட்சிதர் – நைத்ருவ காசியப்ப கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்ரயெனுசா அத்யாயி* அவர்களுக்கு மஹாராஜா சாஹேப் அவர்கள் பிண்ட பரிஹாரார்த்தம் நவக்கிரக ஜபம் பூர்த்தியானதற்காக மேற்படி சுபாவின் திருப்பந்துருத்தி கிராமத்தைச் சார்ந்த டிவேல் கடியில் பூமிதானம் இனாம் கொடுத்த விவரம்

1 2 நஞ்சை ஒரு வேலி

.1 3 புஞ்சை, நஞ்சை ஒவ்வொரு வேலிக்கும் .1. கால் வேலி வீதம் கால்வேலி .1.

பிரம்மவாஸ்துவுக்கும் கோத்திரத்திற்கும் சக்.3

நான்கு பூமி நஞ்சை மூன்று மா வீரராகவ தீட்சிதர், வேலிக்கு மூன்று மா வீதம் மூன்று மா. .1 3

மொத்தம் நஞ்சை புஞ்சை இவைகளில் கால்வேலி மூன்று மா நிலம், நீர்வரத்து , பாசனம், வருவாய் , நிதி, சேமித்தல், ஆகியவற்றோடு முந்தைய வரி, மற்றும் இப்போதைய வரி ஆகிய எல்லா வரிகளையும் சமுதாயத்தோடு பெறும் உரிமை சர்வமானியமாகக் கொடுக்கப்பட்டதால் இதற்கான எல்லை வரையறை செய்யப்பட்டு நிலத்தைக் காலி செய்து கொடுப்பது.

இதனை மகன், பேரன், பரம்பரையாக நடத்தி ஒவ்வொருஆண்டும் புதுக் கடிதம் தயாரித்துப் படியெடுத்துக் கொண்டு அசல் கடிதத்தினை இம்மானியம் அளிக்கப்பட்ட பிராமணனிடம் திருப்பிக் கொடுப்பது.

1 தானம் கொடுப்பது, அதைப்பராமரிப்பது ஆகிய இவற்றில் தானம் கொடுப்பவர் சொர்க்கம் செல்வர், அதைப் பராமரிப்பவர் அச்சுதனுடைய பதமடைவர். பொருளைப் பராமரிப்பவரைவிட தானே தானம் கொடுப்பவர் இரட்டைப் புண்ணியமடைவர் எனினும் பிறருடைய பொருளை அபகரிப்பவரோ தன்னுடைய பொருளையும் இழப்பர். இது சத்தியம் 1

நாள் 9 மொகரம்

கிடைத்தது நாள் 12 மாதம் 11 (நவம்பர்) சுஹூர் ஆண்டு 1783

சித்தாந்த வீரராகவ தீட்சிதர் அவர்களுக்கு சுபா திருவாதி கிராமம் திருப்பந்துருத்தியில் பதினான்கு அடிக்கோலால் அளந்து கொடுத்த நிலம் வேலி

1 நஞ்சை
.13 புஞ்சை
– – –

1|3

இதற்கான சனது மொகரம் 9 இல் 1

– – – – – – – – – – – – –

*கிருஷ்ண யஜூர் வேதத்தின் தைத்ரியப் பகுதியிலுள்ள நான்கு சூத்திரங்களுள் ஒன்று ஆபஸ்தம்ப சூத்திரம். இதனைப் போற்றி ஓதுபவர்.

வரிசை எண்: 19

கட்டு எண்: 86
ஆவண எண் : 6
நாள் : 23—2—1789
திங்கட்கிழமை

பட்டியல் — ராஜஸ்ரீ அமர்சிங் ராஜே அவர்கள் நாற்பது கலத்திற்குக் குறைவாக வரும் ஊர்களுக்கு நாற்பது கலத்திற்கு அதிகமாகக் கொடுத்தது தொடர்பாக — சுஹூர் ஆண்டு 1190 கீலக சம்வத்சரம் ஜமாதிலாவல் மாதம் 27ஆம் தேதி கி.பி. 1789 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் ஆணை வழங்கப்பட்டது.

பட்டியல் — கும்பெனியின் மரக்காலுக்கு எட்டேகால்சேர்

மரக்கால் தொடர்பாகக் கலம்

கும்பெனியின் மரக்கால்		இதற்கு எட்டே..கால் சேர் — மரக்கால்
ஒவ்வொரு கலத்திற்கும்	ℓ 1 ₰ 1	₰ 1 ₰ = ıı
ஒவ்வொரு கலத்திற்கும்	1 ₰ 1	1ℓ 1 ııı = ₰ =
ஒவ்வொரு பத்துக்கலத்திற்கும்	10	11 ıı. ııı — ı =
ஒவ்வொரு அருகிலுள்ள கலத்திற்கும்	100	115 ıı 21 = ııı.

எட்டேகால் சேர் கொரத்தனே

கலம்	10	86 ı 2 ℓ =
	10	ıı ıı.ııı — ı =
	5	5 ııı — ı — ıı

வரிசை எண்: **20**

தொகுப்புக்கட்டு எண்: 20
ஆவண எண்: 3
நாள்: 13.1.1791
திங்கட்கிழமை.

மஹாராஜா இராஜஸ்ரீ அமர்சிங்ஜி
ராஜே சலாம்

ஹானரபில் சர் சர்லிஸ் வொகலி பஹாதர்.
கவர்னர் சென்னப்பட்டணம் அவர்களுக்கு

அரசுக்கருவூலத்தின் பொறுப்பதிகாரியாக உள்ள தங்களுக்கு, இன்று இங்குள்ளோரின் மகிழ்வை அறிந்து அவர்தம் நலத்தினை அடிக்கடி எழுதியனுப்புகிறோம். தங்களின் நலத்தையும் தெரிவிக்கவேண்டும். இப்பவும், தாங்கள் கி.பி.1790ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28ஆம் நாள் எங்களுக்கு அனுப்பிய கடிதத்தினை மேஸ்தர் சுவார்ட்ஸ் பாதரி அவர்களின் வழியாகப்பெற்று கடிதத்தின் பொருளைப் புரிந்துகொண்டேன். அக்கடிதத்தில் தாங்கள் திசம்பர் மாதம் 4ஆம் நாள் எழுதிய கடிதத்தில் எழுதியபடி, வாக்குமூலம் கொடுப்பதற்காக எங்களுடைய சர்க்கேலான சிவராயர் பட்டணத்திற்கு வருவது மிகவும் தேவையானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறெனின், ராவின் செய்தியின்படி, இரண்டு மூன்று நாட்கள் கழித்து மீண்டும் விரைவில் பதில் கொடுத்தனுப்புகிறேன். தாங்கள் எழுதியபடி தங்களின் எண்ணம் போலே ராவ் அவர்களை இங்கிருந்து சீக்கிரம் அனுப்புவதற்கான உறுதி செய்யப்பட்டுள்ளது. வழியில் எதிரிகளின் படையெடுப்பு இருக்குமென்பதாகக் கேள்விப் படுகிறோம். வழியில் எவ்விதத் தொந்தரவும் இல்லாமல் பார்த்து இராவ் அவர்களைச் சீக்கிரமாக அனுப்பிவைக்கின்றேன். ஒவ்வொரு செயலையும் நாங்கள் தங்களுடைய எண்ணத்தின்படியே நடத்திவருவோம் என்பதைத் தாங்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு எங்கள் மீது முழு நம்பிக்கையும் கருணையும் வைத்து நடத்தி வருவீர்களாக. நாங்கள் எப்போதுமே தங்களின் நெருங்கிய நண்பராக இருப்போம் என நம்புங்கள். நட்புக்கொண்ட இடத்தில் அதிகம் என்ன எழுதுவது?

அனுப்பியது : ஜமாதிலாவல் மாதம் 7ஆம் தேதி ஹிஜரி ஆண்டு 1205

கி.பி. 1791ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் தேதி சுஹூர் ஆண்டு 1192.

வரிசை எண்: **21**

தொகுப்புக்கட்டு எண்: 3
ஆவண எண்: 66
நாள் : 21.4.1794
திங்கட்கிழமை

ராஜஸ்ரீ பாதரிசாகேப் அவர்களின் சேவையில், பணியாளர் தத்தாஜியின் மிகுந்த வணக்கம். இப்போதும் தாங்கள் இரக்கம் கொண்டு புத்திமதிகள் கூறி எழுதிய கடிதம் கிடைத்தது. எழுதிய புத்திமதிகளைப் புரிந்துகொண்டேன். மாதோஸ்ரீ மோகனாபாயிசாஹேப் அவர்கள் திருவாதியிலிருந்து காளஹஸ்திக்குச் சென்று அங்கிருந்து காஞ்சிவந்து ஏப்ரிரல் 7ஆம் நாள் இங்கு வந்து சேர்ந்தார்கள். நீலவேணி அக்காவும் அவளுடைய மகன் வெங்கிடசாமி அப்பாவும், அவனுடைய மனைவியும் காஞ்சியிலேயே ஏன்தங்கினர் என்பதற்கான காரணத்தைக் கூறினார்கள். அக்காவின் மகனுக்கும் அவனுடைய மனைவிக்கும் காய்ச்சல் கண்டு துன்பமடைந்தனராம்; தற்போது சௌகரியமாக உள்ளனர். நேற்று அக்கா வந்து சேர்ந்தார்கள். நாளையோ, மறுநாளோ வெங்கடசாமி அப்பாவும் வந்துவிடுவார்கள். மாதோஸ்ரீ பாயிசாஹேப் அவர்கள் வந்த பிறகு திருமண ஏற்பாட்டில் இருக்கிறார்கள். தஞ்சாவூரிலுள்ள மணமகனின் தந்தைக்கு எழுதியனுப்பியுள்ளார். ஆனால், இதுவரை எங்களது ராஜஸ்ரீ எஜமான் சாஹேப் எதுவும் கூறவில்லை. சாமான்கள், பொருட்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மேலே நடக்கும் செய்திகளைப் பின்னால் எழுதி அனுப்புகின்றேன். பதினைந்தாயிரம் கலேதானுக்காகக் கவர்னர் சொல்லிய செய்தியை மாதோஸ்ரீ மூத்த பாயிசாஹேப் கேட்டு மிகுந்த மனவருத்தமடைந்து சொல்லியதாவது, முதலிலேயே ஜப்தி செய்யும் போது பொருளைப் பாதுகாக்க வேண்டுமென்று பாதரி சாஹேப்பிடம் கூறினேன். இப்போதும் கவர்னரிடம் பெற்றுக்கொள்வதோ, பெறாமலிருப்பதோ, நாங்கள் சென்ற ஆண்டு கொடுத்த வீதம் கொடுக்கவேண்டும் என்கிறார்கள். எங்களைப் பற்றிக் கவர்மெண்ட்டுக்குக் கடிதமெழுதிட அதனை மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பிடம் மொழி பெயர்த்து இரண்டு கடிதங்களையும் ஒரு பையில் போட்டு நாளை கவர்னருக்கு அனுப்புகிறோம். 14ஆம் தேதி கும்பெனியிலிருந்து முன்னதாக மூன்று மாதங்களுக்கு மூவாயிரத்து எண்ணூறு ஹோன் பெற்றுக் கொண்டோம். மாதோஸ்ரீ பாயிசாஹேபிற்குப் பதிலாக அருகிலுள்ள பாயிசாஹேப் பெற்றுக்கொண்டார். மேலே, தங்களுடைய ஆணையின் படி, தர்மத்தை நடத்திவருகின்றோம். இதனுடைய விவரத்தை ஆங்கிலத்தில் எழுதி அனுப்புகின்றோம். மூன்றாவது கௌன்சிலரான மேஸ்தர் வாசன்கேட் என்பவருடைய வீட்டிற்கு மேஸ்தர் ஜெரிக் சாஹேப்புடனும் எங்களுடைய ராஜஸ்ரீ எஜமான் சாஹேப் அவர்களுடனும் 16ஆம் தேதி சென்று பேட்டி கண்டுவந்தோம். அவரும் மிகுந்த மரியாதை செய்தார். எங்களுடைய ராஜஸ்ரீ எஜமான் சாஹேப் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினார்கள். அவர்களும் எங்களுடைய பங்களாவுக்கு வருகிறேன் என்று மிகுந்த அன்புடன் கூறினார்கள். ராஜஸ்ரீ எஜமான் சாஹேப் அவர்கள் ஆங்கிலமும் படிக்கிறார்கள்; கணக்கு வழக்குகளும் எழுதுகிறார்கள். வங்காளத்திலிருந்து இதுவரை எங்களுடைய விஷயமாகக் கடிதம் எதுவும் வரவில்லை. மேல்நாட்டிலிருந்து கப்பல் எதுவும் வரவில்லை. இங்கு மழை இல்லாததால் தண்ணீர்வற்றி விடுமென்று தோன்றுகிறது. இன்னும் ஒருமாதத்திற்கான தண்ணீர் எங்களது கிணற்றில் உள்ளது. ராஜஸ்ரீ எஜமான் சாஹேப் தினமும் இரண்டுவேளையும் குதிரைச் சவாரி செய்து வருகிறார்கள். அமர்சிங்ராஜா ஸ்ரீரங்கத்துக்குச் செல்வது; திருச்சிராப்பள்ளிக்குச் செல்வது; நவாப்பின் மகனைக் கூப்பிட்டு அழைத்துச் செல்வது என்று அரசுக்கு எழுதினார். அதற்கு அரசானது செல்வதற்கு அனுமதி ஆணையளித்தது. மேலே நவாப்புக்குச் சொல்லியனுப்பினார். அதற்கு இதுவரை பதில் இல்லை. மற்றைய செய்திகளைக் கேட்டு எழுதி அனுப்புகின்றேன். ராஜஸ்ரீ தாதாவின் கடையிலுள்ள ராஜோபா நேற்று வந்து சேர்ந்தார். தாங்கள் நொடிக்கு நொடி புத்திமதி கூறிக் கடிதம் எழுதி தங்களுடைய சுகத்தையும் மகிழ்வையும் தெரிவிக்கவேண்டும். அரசுக்கு நாங்கள் கொடுக்கவேண்டிய காகிதத்தின் நகலை எழுதி அதனை உறையிலிட்டிருக்கிறோம். அதனைப் பார்த்தால் விளங்கும்.

ஆண்டு கிபி. 1794, ஏப்ரிரல் மாதம் தேதி 21.

வரிசை எண்: **22**

தொகுப்புக்கட்டு எண்: 4
ஆவண எண்: 59
நாள் : 29.4.1794
செவ்வாய்க்கிழமை

ஸ்ரீ

இராஜஸ்ரீ பாதரி சாகேப் அவர்களின் சேவையில், பணியாளர் தத்தாஜி மிகமிக வணக்கம். அவ்வாறே, ஏப்ரல் 21ஆம் நாள் நாங்கள் இங்கிருந்து அனுப்பிய கடிதத்தைப் பார்க்கும் போது தங்களுக்கு எல்லாம் புரிந்திருக்கும். அரசுக்கு நாங்கள் 14ஆம் தேதி கடிதமெழுதி அதனை மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பிடம் மொழிபெயர்த்து சரிகைப் பையிலிட்டு எங்களுடைய ஒற்றர் மூலம் கவர்னருக்கு அனுப்பினோம். கவர்னர் அதற்கான பதிலை மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பின் பெயரில் அனுப்பினார். அதிலுள்ள செய்தி என்னவென்றால், தஞ்சாவூரின் இறந்துபட்ட மன்னரின் குடும்பத்தினர் அனுப்பிய கடிதத்தினைப் பார்வையிட்டு ஆலோசனை செய்து, முடிவு செய்தோம். அதாவது தஞ்சாவூர் அரசு கும்பெனியால் ஐப்தி செய்யப்பட்டிருக்கும்போது, ஒவ்வொரு ஆண்டும் பதினைந்தாயிரம் கலேதான் கொடுத்தால் அந்தப்பொருளுக்குப் பதிலாக ஆண்டுக்கு இரண்டாயிரத்தைந்நூறு ஹோன் கொடுக்கிறோம். கோர்ட் ஆஃப் டைரக்டருக்கு நாங்கள் எழுதிப் பதில் வந்துள்ளது. அதற்கு அவர்கள் ஒப்புதலளித்துள்ளார்கள். நாங்கள் கும்பெனியின் கஜானாவுக்கு ஆணை கொடுத்து ஹோன் அவருக்குக் கிடைக்குமாறு செய்கிறோம் என எழுதியிருந்தது. அதனை மேஸ்தர் ஜெரிக்சாஹேப் அவர்கள் இன்று எங்களது எஜமான் சாஹேப்பிற்குப் படித்துக்காட்டி அதனை மாதோஸ்ரீ பாயிசாஹேப்பிற்குச் சொல்லி, அவர்களுடைய எண்ணத்தை எங்களுக்குச் சொல்லுங்கள். நாங்கள் கவர்னருக்குப் பதில் எழுதவேண்டும் என்று கூறினார்கள். அதன்படியே, மாதோஸ்ரீ உஜாயதாபாயி சாஹேப்பிற்குத் தெரிவித்துச் செய்தியை மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பிடம் அறிவித்தோம். மாதோஸ்ரீ இளைய பாயிசாஹேப் அவர்கள் சொல்லியனுப்பியதாவது, எங்களுடைய யஜமான் சாஹேப்பிற்கு ராஜஸ்ரீ கேரணா போஸலேயின் மகளைத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று பாதரிசாஹேப்பிற்கு எழுதவேண்டும். மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பிற்கும் சொல்லியனுப்பவேண்டும். அதற்கு ராஜஸ்ரீ யஜமான் சாஹேப் சொல்லியதாவது, இப்போது திருமணத்தை நிறுத்திவைத்துவிட்டு பின்னால் செய்து கொள்ளலாம் என்று சொல்லியதனால் மாதோஸ்ரீ பாயிசாகேப் அதைச் சொல்லியனுப்பினார். நாங்கள் ஒன்றும் அதிகப்பணம் செலவு செய்யவில்லை; உங்களையும் ஒன்றும் சொல்லவில்லை. எளிதாகத் திருமணம் செய்கிறேன் என்று தங்களுக்கு எழுதியனுப்பக் கூறினார். அதற்குத் தாங்கள் தயவுசெய்து பதில் எழுதி அனுப்ப வேண்டும். நீலவேணி அக்காவின் மகன் வெங்கடசாமி வந்து சேர்ந்தான். நீலவேணி அக்காவும் நேற்று தஞ்சாவூருக்குப் புறப்பட்டுப் போயிருக்க வேண்டும். திருமணத்திற்கான பொருட்களை விரைவில் அனுப்பவும். இம்மாதம் இருபத்து மூன்றாம் தேதி வெளி நாட்டிலிருந்து முறையே

இரண்டு கப்பல்கள் வந்தன. அதில் கொஞ்சம் சோல்தாஜ் மற்றும் நிறைய பாத்திரங்கள் ஆகியவற்றுடன் கர்னல் இஸ்டுட் வந்தார். லார்டு ஆதரெட் என்பவர் கவர்னர் ஜெனரல் மேடோஸ் சொல்லிவருகிறார் என நிச்சயமாகச் சொன்னார்கள். பங்களாவிலிருந்து எங்களது விஷயமாக இன்னும் ஒரு காகிதமும் வரவில்லை. எங்களுக்குத் தஞ்சாவூரில் பொருட்செலவு ஆகிறது என்பதற்காக ஆயிரம் கலம் பெறவேண்டியதாயுள்ளது. அதற்காக சிவராயரிடம் ஆளனுப்புவதா, வேண்டாமா என்பதை இராஜஸ்ரீ அண்ணாஜி பந்த் தங்களிடம் கூறுவார். அப்போது ஆணை வழங்க வேண்டுகிறேன். பொருளுக்குப் பதிலாக கும்பெனியிலிருந்து இரண்டாயிரத்து ஐநூறு ஹோன் கொடுக்கிறார்கள். அதனை மாதோஸ்ரீ மூத்த பாயிசாஹேப் அவர்கள் ஒருவேளை ஏற்கமறுத்துத் தகராறு செய்தார்கள் எனில், நாங்கள் அந்த இரண்டாயிரத்து ஐநூறு ஹோனைப் பெறுவதா, வேண்டாமா என்பதை விரைவில் எழுதியனுப்பவும். பெறுவதே நல்லது என்று மேஸ்தர் ஜெரிக் சாஹேப் முதலியோர் சொல்கின்றனர். தங்களுக்குத் தெரிவிப்பதற்காக இதனை எழுதுகிறேன். மேலே நடக்கும் செய்திகளைப் பின்னால் எழுதி அனுப்புகின்றேன். நாங்கள் அரசுக்கு எழுதிய கடித மொழிபெயர்ப்பின் நகலும் கவர்னர் அவர்கள் மேஸ்தர் ஜெரிக் சாஹேப் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் நகலும் பின்னால் அனுப்புகிறேன். லார்டின் தயவால் எல்லோரும் நலமுடன் இருக்கின்றோம். தங்களின் நலனை அறிய விழைகின்றேன்.

ஏப்பிரல் 29, சித்திரை மாதம் தேதி 20, ரம்ஜான் தேதி 28, ஆண்டு கி.பி. 1794.

வரிசை எண்: **22-A**

மூட்டை எண்: 104
ஆவண எண்: 1
காலம் :அமரசிம்மன்

ஸ்ரீ

மகாராஜா இராஜஸ்ரீ பாபண்ணா சுவாமிக்கு தத்தாஜியின் பணிவான வணக்கம். இங்கு அனைவரும் நலம். கார்த்திகை மாதம் 24ஆம் தேதியிட்ட இக் கடிதம் கிடைக்கப்பெற்றதும், தங்களது நலத்தை எழுதியனுப்பவும். அண்மையில் தங்களிடமிருந்து இரண்டு மூன்று கடிதங்கள் வந்து கிடைத்தன. இருப்பினும், அவற்றிற்குப் பதில் எழுத எங்களால் இயலவில்லை; அதற்காக மன்னிக்கவும். தாங்கள் அங்கு தஞ்சாவூர் அரசிடம் பணிபுரிந்து வருகிறீர்கள். தாங்கள் எழுதிய விண்ணப்பத்தினை அப்படியே ஸ்ரீமந்த் சத்ரபதி சாகேப்பிடம் அளித்தோம். அவர் அதற்காக வெளியிட்ட ஆணையின்படி, தற்போது எழுதுகின்றேன். தற்போது உள்ளவர் மாறுபாடாக நடப்பதில்லை. அவரைத்தவிர்த்து – இராஜஸ்ரீ இராவ்ஜிக்காக அவரை நீக்குவது சரியல்ல. இராஜஸ்ரீ பாதரிசாகேப்புக்குத் தெரியாமல் செய்வதும் நல்லதல்ல. முதலில் பாபுநாசத்தின் பதக்நீஸ் இராஜஸ்ரீ பாபண்ணாவை அந்த வேலைக்காக சாகேப் சொல்லியிருந்தார்கள். அவர் ஏதோ குற்றம் செய்தார் என்பதற்காக அவரை நீக்க வேண்டுமென்று கூறியபோழ்து தற்போது உள்ளவரை மாற்ற வேண்டாம் என்று கூறினார்கள். தாங்கள் அனுப்பிய கடிதத்தினையும் படித்துப்பார்த்தார்கள். தங்கள் மீது மிகுந்த அன்பு கொண்டிருக்கிறார்கள். இராஜஸ்ரீ பாதரி சாகேப்பும் அன்புடன் இருக்கிறார்கள். எல்லாம் அனுகூலமாகவே இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலே என்ன எழுதுவது. பணிவுடன் இவ்வளவே. நாம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சாதகம் செய்திருக்கிறோம். மேலும் முயற்சி செய்கிறோம். இராஜஸ்ரீ பாதரி சாகேப்பிடம் தயை பெற்று அவரிடம் நல்ல பெயர் வாங்கவும். பிறவற்றைத் தெரிவிக்கவும்.

வரிசை எண்: **23**

தொகுப்புக் கட்டு எண்: 4
ஆவண எண்:58
நாள் : 8.6.1794
ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீ

நகல்

இராஜஸ்ரீ பாதரி சாஹேப்பின் சேவையில், பணியாளர் தத்தாஜி மிகமிக வணக்கம். இப்பவும், தாங்கள் வங்காளத்திற்கு அனுப்பிய சூன் 5ஆம் தேதியிட்ட ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் மகாராட்டிர மொழிக் கடிதங்கள் நேற்று வந்து சேர்ந்தன. அந்த மகாராட்டிர மொழிக் கடிதம் ராஜஸ்ரீ எஜமான் சாஹேப் தன்னுடைய கையெழுத்தில் பொன் வண்ணம் பூசிய காகிதத்தில் எழுதித் தயாரித்ததாகும். நாளை அதனைச் சரிகைப் பையிலிட்டுக் கவர்னருக்கு அனுப்புகிறேன். பொருளுக்குப் பதிலாக இரண்டாயிரத்து ஐநூறு ஹோன் மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பின் வீட்டில் இருந்தது. அதனை நேற்றுக் கொண்டுவந்து அரண்மனையில் வைத்திருக்கிறது. இதுவரை மாதோஸ்ரீ மூத்த பாயிசாஹேப்பிடம் பெற்றுக்கொள்ளச் சொல்லியிருக்கும்போது நேற்று மாதோஸ்ரீ மோகனா பாயிசாஹேப்பின் சகோதரன் முத்தோஜி இங்களே என்ற பிரதிவாதிக்கு மிகவும் உடல்நலமில்லை என்று கடிதம் வந்ததாகக் கூறுகிறார். அதனை மாதோஸ்ரீ பாயிசாஹேப் அவர்கள் படித்துப் பார்த்துவிட்டுத் தாம் தஞ்சாவூருக்குப் போக வேண்டுமென்று, எங்களிடம் சொல்லிக் கொள்ளாமல், பணம் கொடுத்துத் தின்பண்டங்கள் வாங்கிக் கட்டிக் கொண்டு உறவினர்களிடம் சொல்லியனுப்பினார்கள் என்று தெரிகிறது. அதன் பிறகு நாங்கள் ராஜஸ்ரீ எஜமான் சாஹேப் அவர்களுடன் சென்று என்னவென்று விசாரித்த பொழுது "சகோதரனுக்கு உடல் நலமில்லை; சாமான், பொருட்கள் முதலியவற்றை இங்கேயே வைத்துவிட்டு விரைவில் சென்று வருவதாகக்" கூறினார்கள். கவர்னரிடம் கூறிக் கவர்னரின் ஆணை எப்படியிருக்கிறதோ, அப்படி நடவடிக்கை மேற்கொள்வோம் என்று கூறியும், கேட்கவில்லை. இன்று இரவே செல்வோம் என்று கூறினார்கள். மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பிடம் சொல்லியனுப்பினோம். அதற்கு அவர் எப்படியும் கவர்னரின் ஆணை பெற்றபிறகு யாரையும் பார்ப்போம் என்றார். ஆனால் பாயிசாஹேப் கேட்கவில்லை. இரவு 5 மணிநேரம் கழிந்த பின்னர் நாங்கள் அவருடைய சகோதரரை வரவிடாமல் செய்து வந்திருந்த உறவினரை வெளியிலனுப்பிவிட்டதால் சவாரி செல்லாமல் தங்கிவிட்டது. அடுத்தநாள் அதிகாலையில் செல்வோம் என்றார். மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பிடம் சொல்லி கவர்னரின் ஆணையைப் பெறவேண்டி மேஸ்தர் ஜெரிக் அவர்களிடம் நடந்ததை விசாரித்தார்கள். அதற்கு இன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் நாளை கவர்னரிடம் சென்று சொல்கிறேன் என்றார். அதனால் திங்கட்கிழமை இரண்டு மணி நேரம் எதிர்பார்த்துவிட்டு அதன்பிறகு நாங்கள் புறப்பட்டுச் செல்கிறோம் என்று ஒற்றைக்காலில் நிற்கிறார். எங்களுடைய சொல்லைக் கேட்கவில்லை. அவரிடம் பக்கபலத்துடனும், பணியாளர்களுடனும் சேர்ந்து செல்வோம் என்று போதனை செய்து கொண்டிருக்கிறார். நீலவேணி அக்காவின் மகன் வெங்கடசாமி இன்று துபாஷி ஜெகநாதராயாவிடம் சென்று சிவராயாவின் சகோதரர் அப்பாவிடம் சில சேதி சொல்லி அனுப்பினார்கள். கவர்னரின் ஆணையைப் பெறுகிறோம் என்ற கூறி வெளியே சென்று அவருடைய மனத்திலுள்ளதை எப்படியாவது பாயிசாஹேப்புடன் தஞ்சாவூருக்கு எடுத்துச் செல்கிறார். எல்லோரும் நாளை புறப்படுகிறார்கள். அதனால் தாங்கள் எங்களுக்கு என்ன ஆணை கொடுக்கிறீர்கள் என்பதை எழுதவேண்டும்.

சூன் மாதம் 8ஆம் தேதி, ஆண்டு கி.பி.1794.

வரிசை எண்: **24**

தொகுப்புக்கட்டு எண்: 4
ஆவண எண்: 57
நாள் : 12.6.1794
வியாழக்கிழமை

ஸ்ரீராம பிரசன்ன

இராஜஸ்ரீ பாதரி சாகேப்பின் சேவையில், பணியாளர் தத்தாஜியின் மிகுந்த வணக்கம். இப்பவும் சூன் மாதம் எட்டாம் தேதி நாங்கள் எழுதியனுப்பிய கடிதத்தின்படி, இங்குள்ள செய்திகள் தங்களுக்குப் புரிந்திருக்கும். அதன்பிறகு, மாதோஸ்ரீ இளையபாயிசாஹேப் அவர்கள் தன்னுடைய சகோதரரைப் பார்க்கவேண்டுமென்று, தஞ்சாவூருக்குப் போவதற்காக, கவர்னருக்குத் தெரிவிக்காமல் சுற்றத்தாரைக் கூப்பிட்டனுப்பினார்கள். நாங்கள், அவர்கள் யாரும் வராதபடிக்குச் செய்தோம். அடுத்த நாள் திங்கட் கிழமை அதிகாலையில் மேஸ்தர் ஜெரிக் சாஹேப் அவர்களிடமிருந்து (வங்காளத்திற்கு) அனுப்பவேண்டிய கடிதத்தினை ஜரிகைப்பையிலிட்டு கவர்னருக்கும் அதனுடைய இன்னொரு நகலை மேஸ்தர் ஜெரிக்சாஹேப்பிற்கும் கொடுத்தனுப்பினேன். இளைய பாயிசாஹேப்பின் பெயரில் சொல்லவேண்டிய செய்தியைச் சொல்லி அனுப்பியதால், கவர்னர் மிகுந்த இரக்கத்துடன் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். விரைவில் வங்காளத்திற்கு அனுப்புகிறேன் என்றும் கூறினார். மாதோஸ்ரீ இளையபாயி சாஹேப்பின் பயணத்திற்குக் கவர்னர் கூறியதாவது; அறையின் வெளியே செல்வதற்குக் கூட நான் ஆணை அளிக்கமாட்டேன். தனியே செல்லத் தேவையில்லை. அவர் செல்கிறேன் என்று முடிவு செய்தால், பங்கின் அதிகாரம் இராஜஸ்ரீ யஜமான் சாஹேப் அவர்களுக்காக அளிக்கப்பட்டு, அவரும் நீங்களும் முன்னதாகவே கோட்டையின் சுபேதாருக்கு ஆணை கொடுப்பது. பல்லக்கை விடுவதற்கு அவசியமில்லை யென்றும், சுற்றத்தினரை உள்ளேவிட அவசியமில்லை என்றும் சொல்லியனுப்பினார். அதன்பின் மேஸ்தர் ஜெரிக் சாஹேப் அவர்கள்பாயிசாஹேப்பின் அறைக்கு வந்து உட்கார்ந்து சொல்லியனுப்பிதாவது. கவர்னரின் ஆணை கிடைப்பதில்லை. நீங்கள் தஞ்சாவூருக்குப் போகக்கூடாது, என்று கவர்னர் கூறினார். பாவேயும் ஒருமுறை சுருக்கமாகக் கூறினார். அதற்கு பாயிசாஹேப், எங்களுக்கு ஆணை கொடுக்காவிட்டால் நாங்கள் சாப்பிடமாட்டோம்; பட்டினி கிடக்கின்றோம் என்றார். அதற்கு ஏன் நீங்கள் சாப்பிட்டு சமாதானமாக இருக்கக் கூடாது எனக் கேட்டுவிட்டு மேஸ்தர் ஜெரிக் சாஹேப் வேப்பேரிக்குச் சென்றுவிட்டார். அதன்பிறகு மாதோஸ்ரீ பாயிசாஹேப் அவர்கள் என்னைக் கூப்பிட்டனுப்பினார். நான் அறைவரை சென்று ஆணை என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர், அறைக்குப் பல்லக்குக் கொண்டு வாருங்கள்; எங்களை முட்டைக்காரர் சாவடிவரை கொண்டுவந்து விடுங்கள்; அதுவரை நீங்கள் சாப்பிடத் தேவையில்லை என்று என்னைத் தடுத்துக்கொண்டார்கள். அதற்கு நான், அறைக்கு வெளியே சொந்த வேலை என்முலம் நடக்காது; வேறு ஏதாவது வேலை சொன்னால் செய்கின்றேன் என்று சொன்னேன். அதற்கு 'நாங்கள் வெளியே செல்லுமாறு செய்ய இயலாவிட்டால் நீங்கள் மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பிடம்

எங்களைப்பற்றிப் பேசத் தேவையில்லை. எங்களுடைய ஆளைக் கொண்டு செய்து கொள்கின்றோம். அந்த ஆளை மேஸ்தர் ஜெரிக் இடம் அழைத்துச் சென்று காட்டிவிடுங்கள்' என்றார். அவ்வாறே மேஸ்தர் ஜெரிக்சாஹேப்பிடம் சென்று ஒப்படைத்தோம். அதன் பிறகு அவர்களிடமிருந்த ஒற்றர், எழுத்தர் மற்றும் போர்வீரர் ஆகியோர் ஒன்றாகச் சென்று ஒரே நாளில் ஒவ்வொரு நாளிகைக்கும் மூன்று அல்லது நான்கு காத தூரம் ஆவர்த்தி சென்று தொந்தரவு செய்ததற்குச் சுருக்கமாகக் கவர்னர் கூறியவாறு பதிலளிக்கப்பட்டது. இதனிடையில் வெங்கடசாமி ஒரு பெட்டிசன் எழுதி யாருக்கும் தெரியாமல் ஒற்றர் மூலமாகக் கவர்னருக்கு அனுப்ப அதைக் கவர்னர் ஜெரிக்கிற்கு அனுப்பினார். அதன்பிறகு மாதோஸ்ரீ பாயிசாஹேப் அவர்கள், 'நாங்கள் தஞ்சாவூருக்கும் செல்லவில்லை, இங்கும் இருக்கவில்லை,எங்காவது வேறு அறையில் இருக்கின்றோம்' என்று சொல்லியனுப்பிவிட்டு ஒருநாள் சாப்பிடாமல் இருந்தார்கள். அதனால் ராஜஸ்ரீ யஜமான் சாஹேப் அவர்கள் சென்று சமாதானப்படுத்தினார்கள். வெங்கடசாமி நீலவேணி அக்காவின் பையன், பெண் ஆகியோரது திருமணத்திற்காகத் தஞ்சாவூருக்குச் செல்ல விருக்கின்றான். இதனை எதிர்த் தரப்பினருக்குச் சொல்லி, கவர்னருக்குக் கடிதமனுப்பி, உங்களைத் தஞ்சாவூருக்கு வரும்படி செய்கின்றேன் என்று சொல்லித் திருமணத்திற்காக இருநூறு சக்கரம் பாயிசாஹேப்பிடமிருந்து பெற்றுக் கொண்டு தஞ்சாவூருக்கு நேற்றுப் போய்ச் சேர்ந்தான். தகவலுக்காக இதனை எழுதியுள்ளேன். வங்காளத்திற்கான கடிதத்தை நாங்கள் திங்கட்கிழமை கவர்னிடம் கொடுத்தோம். செவ்வாய்க் கிழமை கௌன்சிலின் ஆணை கிடைத்து அதனை மேஸ்தர் கினஸ் மிக்க பரிவுடன் செவ்வாய்க்கிழமை இரவே வங்காளத்திற்கு அனுப்பி விட்டார். கேசுவல் கர்னல் கூடலூரில் காய்ச்சலாகி இறந்து விட்டார். மேஸ்தர் ஜெரிக் சாஹேப்பின் மகன் லெப்டினெண்ட் வடக்கிலிருந்து இங்கு வந்திருந்தான். அவன் திரும்பி கடலிலுள்ள சிறிய மலைகளைத் தாண்டித் தன்னுடைய ஊருக்குச் சென்று இருபது நாட்களாகின்றன. மூன்று நாட்களில் சென்று விடுவேன் என்றான். இருபது நாட்களாகியும் தகவல் எதுவும் தெரியவில்லை என்று மேஸ்தர் ஜெரிக் சாஹேப் மிகுந்த மனவருத்தத்துடன் இருந்தார். ராஜஸ்ரீ எஜமான் சாஹேப்பும், மாதோஸ்ரீ பாயிசாஹேப்பும் லார்டின் தயவால் சுகமாக இருக்கின்றனர். தஞ்சாவூரிலிருந்து வந்த உற்றார் உறவினர்கள், மாப்பிள்ளை, பெண்ணுடன் இராஜஸ்ரீ சதாசிவ மொஹிதே அவர்களிடம் தங்கி, இன்று புறப்பட்டுச் சென்றிருப்பார்கள். பொருளுக்குப் பதிலாக இரண்டரை ஆயிரம் ஹோன் எங்களிடம் இருக்கிறது. மாதோஸ்ரீ இளைய பாயிசாஹேப் அவர்களின் பதில் கேள்வியால் கொடுக்கவில்லை. இனிமேலுள்ள செய்திகளை எழுதி அனுப்புகின்றேன். இனி என்ன எழுதுவது? பணிவுடன் மாதோஸ்ரீ இளைய பாயிசாஹேப்பின் தஞ்சாவூர்ப் பயணம் நின்றுவிட்டது என அறிவிக்க விழைகின்றேன்.

அனுப்பியது ஜூன் மாதம் 12ஆம் தேதி, ஆண்டு 1794.

வரிசை எண்: 25

தொகுப்புக்கட்டு எண்: 16
ஆவண எண்: 16
காலம்: 1794(Water mark)

பட்டியல் — தேவஸ்தானம் — சுபா கும்பகோணம் — பதக் புந்தநல்லூர் — இவற்றில் மணமேடு மாகாணம் தேவஸ்தானத்தின் விவரம்.

2. சர்க்கார் மொயின் உடைய கோயில்

10.சக். மணமேடு உளூர் தேவஸ்தானம்
நாகநாதசுவாமி — முழுமொயின்
ஆண்டுக்கு சக்கரம் 20 இதில்
ஆறுமாதத்திற்குப் பாதி ஒப்பந்தம்

18 சக். விருத்தாநல்லூர் வைத்தியநாத சுவாமி
முழு மொயின் 36 சக்கரத்திற்குப் பாதி _ ஒப்பந்தம்.

----
28 சக்.

4. சர்க்கார் மொயின் இல்லாத தேவஸ்தானம்

1. காளையச்சிதவேரேஸ்வரர் சுவாமி
1. பூதமங்கலம் கிருபாளநாதேஸ்வரர் சுவாமி
1. புந்தநல்லூர் சக்தி விநாயகர் சுவாமி
1. குறிச்சி விஸ்வநாத சுவாமி கல்பகப்பிள்ளையார்

—
4

—
6.

மொத்தம் ஆறு தேவஸ்தானங்களில் இரு கோயில்களுக்குச் சர்க்கார் மொயின் உண்டு. மீதமுள்ள நான்கு கோயில்களுக்கு சுத்தமாகச் சர்க்கார் மொயின் கிடையாது. ஆகையால் ஆறு தேவஸ்தானங்களுக்கு அந்தந்த கோயில்களிலுள்ள மரம்,மட்டை வகையறாக்களின் ஆதாரத்தைக் கொடுத்து இறைவனுக்குப் பூஜை நைவேத்தியம் செய்து வரவும்.

கோயில் விஸ்வச்சேரி நமசிவாயப்பிள்ளையின் கமாவிசியில் பில்கள் பார்க்கப்பட்டன. அவர் செலவுப் பில்லில் கண்டவாறு கூறியதை கோயிலார் கொடுக்கவில்லை. இதனால் நடைபெற்று வந்த சர்வமானிய பங்கு பாதி மானியமாக்கப்பட்டு அரசுக்குக் கணக்குக் கொடுக்கப்பட்டது. அத்தகவல் எங்களுக்குக் கிடைத்ததும் நேற்று கலகம் ஏற்பட்டது. அதன் பிறகு ராட்சத வருடம் குண்டோபாவின் மத்யஸ்தத்தினால் கமாவிசி ராகோபா பாதி மானியத்திற்குப் பதிலாகக் கூடுதலாகப் பெற்று கோயிலுக்குக் கொண்டு வந்து பாராவில் வைத்து, போட்டா போட்டியாகச் செய்து மிகுந்த கஷ்டத்தினைக் கொடுத்தார். அதனால் இறைவனின் தீர்வையைச் செலுத்துவதற்காகக் கோயிலிலுள்ள பாத்திரம் முதலியவற்றை விற்று அப்பொருள் கொடுக்கப்பட்டது. அவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் பாதிமானியத்தைக் கூடுதலாக்கிப் பொருள் பெற்று வரப்படுகிறது. வரக்கூடிய நான்கு அல்லது ஐந்து கித்தாவில், பில்லினைப் பார்த்து அதற்குப் படிச்செலவு, பலவிதமான உபத்திரவங்களைச் செய்ததால் இறைவனுக்குப் பாதி மானியமே கிடைத்து வந்தது. அப்பொருளையும் கொடுத்து, யாசகம் செய்து இறைவனுக்குப் பூஜை நைவேத்தியம் செய்யப்பட்டு வந்தது. இவ்வாறான உபத்திரம் ஆகியபடியால் கோயில் தொடர்பான பூஜை, நைவேத்தியம் நடத்திவருவது மிகுந்த சங்கடமாக இருக்கிறது. இதற்காக சாஹேப் அவர்கள் தயவு கொண்டு சிவகாரியம் நடத்தி வருவதற்காக முன்பு இறைவனுக்குச் சர்வமானியம் (முழுமானியம்) கொடுத்து வந்ததைப் போலவே தற்போதும் சர்வமானியம் செய்து கொடுத்து இறைவனுக்குப் பூஜை நைவேத்தியம் சரியாக நடைபெற ஆணை வழங்குமாறு வேண்டப்படுகிறது.

காலம் — காளயுக்தி ஆண்டு பங்கு — பாதி மானியம் கூடுதல் — சர்க்காரால் கொடுக்கப்பட்டது. 8 1/2 — 2. இதற்குப் பில் செலவு , படிச்செலவு இவற்றிற்கு ஒன்றிற்கு இரண்டாகக் கொடுத்தும், செலவினைச் சரிக்கட்ட இயலவில்லை. இதற்காக ஏதாவது செய்து கொடுப்பது நிச்சயமில்லை. அதனால் இறைவனுக்கு எதுவும் சரியாகச் செய்ய முடியவில்லை. ஆகவே சர்வமானியம் செய்து கொடுக்க அரசாணை பிறப்பிக்க வேண்டும்.

வரிசை எண்: **26**

தொகுப்புக்கட்டு எண்:4
ஆவண எண்:39
காலம்: 23 – 5 – 1795
சனிக்கிழமை.

கடிதம் கிடைத்த நாள் :4 ஜில்காத், சுஹூர் ஆண்டு 1196
வைகாசி தேதி 2

ஸ்ரீ

பட்டியல் – திருநாகேஸ்வரம் – ஸ்ரீ நாகநாத சுவாமி கோயிலார் சுஹூர் ஆண்டு 1196 ராக்ஷஸ வருடம் எழுதிக் கொடுத்த விண்ணப்பம் – கோயில், ரயத், மற்றும் சாகுபடி ஆகியவற்றை அணைக்குடி பதக்கைச் சார்ந்தோர் திரும்பவும் பெற்றுக் கொண்டதால் பொருள் அணைக்குடி பதக்கைச் சார்ந்தோரிடம் சென்றடையும் விவரம் – சக்கரம்.

205 சக். முன்பு கோவிலைப் பராமரிக்கும் அம்பலவாணப் பண்டாரம் நாகசெட்டியிடம் பெற்றது – 56 சக்கரம். கோயிலின் நிலத்திற்காகச் செலவிடப்பட்டது.

19 சக். வீட்டின் மேற்குப்புறம் வைக்கப்பட்டிருந்த மரம், செடிகொடி, வேலி முதலியனவற்றை விற்றுப் பெற்றது.

50 சக். மெய்க்காவல் வீரன்கோயிலில் கடன் வாங்கியதற்காகத் தான ஈடு செலுத்தியது தொடர்பாக 300 கலம். இதனைச் சாப்பிட்டுவிட்ட கண்காணியிடமிருந்து பொருள் பெற்றுக் கொடுத்தது.

– – – – – – – –

125 சக்.

80 சக். அணைக்குடி பதக்கிற்குக் கோவில் கொடுக்கப்பட்ட பின்பு அணைக்குடிக்காரர்கள் கோயிலின் பெயருக்குப் பத்திரம் எழுதி இந்த நூற்று இருபத்தைந்து சக்கரம் தானமும் அதற்கு..... வட்டியும்.

---

205 சக்.

110 சக். கோயிலின் நெசவுக்காரர்கள் , வீதியில் தெற்குப் பக்கமாக நெசவுக் கருவிகளுடன் வந்து தங்கியிருந்தனர். அவர்களில் ஒருவனை அணைக்குடியின் அதிகாரியின் மருமகன் (சகோதரியின் மகன்) கொன்று விட்டான். அதனால் நெசவுக்காரர்கள் ஒன்றுசேர்ந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்கள்.அதற்கு அணைக்குடிக் காரர்கள் தங்கள் மீது பழி வருமென்று அஞ்சி செலவு செய்து விசாரணை இல்லாமல் செய்து விட்டபடியால் குலக் காரியத்திற்காகச் செலவு செய்யப்பட்டது என்று கோவிலின் பொருளை அணைக்குடிக்காரர் எடுத்துச் சென்றார் என்பது தொடர்பாக – சக்கரம்.

212 11 சக். அணைக்குடி பதக்கில் ஊர் மற்றும் கோவில் ஆகியவற்றில் கோயிலுக்குச் செலவு ஏற்படுவது பரவாயில்லை என்று கூறி பதக்கில் பெற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே இரண்டு ஆண்டுகள் செலவில்லை..... எழுதிக் கொடுக்கப்பட்டது.தற்போது உடையாளூர் வதனத்தில் கோயிலும் ஊரும் பெறுவதற்காகச் செலவாகியிருக்கிறது. இதில் கோயிலின் பொருளில் செலவினைக் காட்டி,பொருளைப் பெற்றுக் கொண்டது.

7.11 பிரமாதி ஆண்டு தொடர்பாகச் சக்கரம்

73 ॥ 3	..... ஆண்டு தொடர்பாக.
53சக். 3 பலம் –	இராட்சச ஆண்டு தொடர்பாக
15 சக்.	குதிரை வாங்கியது தொடர்பாக.
– – –	
212 ॥	
– – –	
160 சக்.	நெசவுக்காரர் முதலியோர் ஒரே அளவாக வரி வைத்து கோயிலின் திருப்பணி செய்கின்றோம் என்று 50 சக்கரம் கொடுத்துத் திருப்பணி செய்யும் போது அணைக்குடிக்காரர்கள் 'நீங்கள் திருப்பணி செய்யத் தேவையில்லை. அந்தத் திருப்பணித் தர்மத்தை நான் செய்கின்றேன்' என்று தம்முடைய மனிதர்களுக்குச் சொல்லி திருப்பணி தருமத்தைத் தன்னுடைய பெயரில் நடத்திக் கோயிலின் பொருளின் நூற்றி அறுபது சக்கரத்தினைச் செலவு செய்து விட்டனர் என்பது தொடர்பாக.
30 சக்.	மத்தியார்ச்சுனத்தின் பண்டாரம் திருச்சினாபள்ளியின் குனியாபிள்ளைக்கு முப்பது சக்கரம் கடன் கொடுத்திருந்தார். அவருடைய முப்பது சக்கரத்திற்கான சீட்டு அவருக்குக் கிடைத்ததை அணைக்குடிக்காரரிடம் கொடுத்து திருநாகேஸ்வரருக்கு ஆபரணம் செய்து போடவேண்டும் என்று அணைக்குடிக்காரரிடம் வட்டியும் முதலுமாக இறைவனுக்குக் கொடுப்பதாகக் கூறினார். அதிலிருந்து ஒரு காசு இறைவனுக்குக் கொடுக்கவில்லை என்பது தொடர்பாக.
125சக்.	கோயில் உசேபிள்ளையின் பதக்கிற்குக் கிடைத்தபோது நூற்றி இருபத்தைந்து சக்கரம் உசேபிள்ளைக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. அப்பொருள் அணைக்குடி பதக்கிற்குக் கிடைத்ததும், உசேபிள்ளைக்குப் பொருள் கொடுக்கிறோம் என்று கடன் சீட்டு எழுதிக் கொடுத்தும், பொருளை உசேபிள்ளைக்குக் கொடுக்காமல் கோயிலின் பொருளோடு செலவு செய்துவிட்டது தொடர்பாக.
5சக்.	கோயிலின் எண்ணெய்க்காகக் கடன் வாங்கியது ஐந்து சக்கரம்
90சக்.	அணைக்குடிக்காரர் சிதம்பரம் பிள்ளையைக் கோயிலின் மணியமாக நியமித்திருந்தனர். அதற்காகக் கிடைத்த பொருளுக்கு வரி– சக்கரம்
60சக்	கோயிலின் இலுப்பைத்தோப்பை அணைக்குடிக்காரர் பாக்கிக்காகக் கொடுத்திருந்தனர். அது தொடர்பாகக் கிடைத்தது ஆடி மாதம் 25 நாள் ஒவ்வொரு நாளுக்கும் 2சக் . 4 பலம் வீதம்
33 ॥.॥ = சக்.	மெய்க்காவல் வீரனிடம் குருப் மற்றும் செக்டா தொடர்பாக வந்தது.
24சக்.	கோயிலின் எண்ணெய்க்காக தற்போது பதினோரு ஆடம் (?) மெய்க்காவல் வீரனிடம் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு ஆடத்தில் எண்ணெய் வந்தது. அதிகமாக ஆடம் எண்ணெய் வருவது எனின், ஒவ்வொரு ஆடத்திற்கும் 2சக். 4 பலம் வீதம்.
– – – – –	
1055சக். ॥। =	
– – – – – –	

ஆக ஓராயிரம் ஐம்பத்தைந்து சக்கரம் 1 1/2 பலம் வரவான பொருளைக் கோயிலுக்குக் கொடுக்கவேண்டும். இதுதவிர, கோயிலுக்குக் கார்த்திகை மாதம் உற்சவத்திற்காக அரசிடமிருந்து இரண்டு மாத மொயின் தர இசைவளிக்கப்பட்டது. இருந்தும் , அப்பொருளைக் கொடுக்கவில்லை.

தியாகராஜன்
கையொப்பம் அருணாசலம்
கையொப்பம் முத்தையன்

வரிசை எண்: **27**

தொகுப்புக்கட்டு எண்: 16
ஆவண எண்: 15
காலம் : கி.பி. 1796

பட்டியல் – விண்ணப்பம் – வெங்கடேஸ்வர சாஸ்திரி மற்றும் காமேஸ்வர்ய்யா ஆகியோர் சுஹூர் ஆண்டு 1197 இல் எழுதிக் கொடுத்த விண்ணப்ப விவரமாவது :

இராஜஸ்ரீ மஹாராஜா அவர்கள் ஏழைப் பிராமணர்களின் மேல் இரக்கம் வைத்து சுபா திருவாதி மிராண்டர் பத்து (மெரட்டூர் பத்து) ஊத்துக்காடு பிரிவு, அம்ருதவேலி இதில் பதினைந்தே முக்கால் வேலி ஊரணி, குடிசை இவற்றின் தரப்பில் பதினாறரை வேலி நிலம் ஆக மொத்தம் தரிசு நஞ்சை 32 ¼– சாதாரண வருடம் சுரோத்திரியம் செய்து ஆவணம் எழுதிக் கொடுத்தது – சுரோத்திரியம் செய்து கொடுப்பதற்குப் பதிலாகப் பிராமணர்களின் செய்தியாவது, பூர்வீகத்தில் வட்டிக்கு ஆயிரம் சக்கரம் கடன் வாங்கி சர்க்காருக்கு ஆயிரம் சக்கரம் கொடையாகக் கொடுக்கப்பட்டது. பிரமாதி ஆண்டு அது ஜப்திக்கு வருவதால் சர்க்காரின் மஹால்தாரர், காட்டி, காமாட்டி ஆகியவர்களை அனுப்பி அம்ருதவேலியிலிருந்து பதினைந்தே முக்கால் வேலி நிலத்தை அளந்து கொடுத்தோம். நகரிலிருந்து நிலத்தை அளந்து கொடுக்கச் சென்றவிடத்தில், வில்லேதார் வெங்கப்பாவின் ஆளான பெருமாளை ரயத்துக்காரர் கட்டிப்போட்டு நிலத்தை அளக்கவொட்டாமல் செய்தனர். திரும்பவும் ஆனந்த வருடம், வில்லேதார் வெங்கப்பாவின் நிர்வாகி முத்துசாமி அய்யங்காரை அனுப்பி சர்க்காரின் ஒற்றர்கள், மஹால்தாரர், காமாட்டி, காட்டி ஆகியோரை அனுப்பி கத்பாவின் நிலத்தை அளந்து குணபி*க்குக் கொடுக்கப்பட்டது. இது தவிர, தீபாம்பாபுரம் கோயிலுக்குச் சர்வமானியம் இருக்கிறது என்று ரயத் சொல்லி, ஐந்தேகால் வேலி நிலம் அளந்து கொடுக்கப்பட்டது. இது தொடர்பாகக் கோயிலின் சர்வமானியம் நிலம் மற்றும் அதிகப்படியான நிலம் பதினான்கு அடிக்கோலால் பதினாறரை வேலிநிலம் சுரோத்திரியத்திற்காக அளந்து கொடுக்கப்பட்டது. இரயத்திடமிருந்து கையெழுத்து வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னபோது குணபி இல்லையென்று முத்துசாமி அய்யங்கார் கூறினார். அதன் பின்னர், ஆனந்த வருடம் குணபியின் சுரோத்திரியம் நிலத்தில் பழத்தோட்டம் அமைத்ததில் கிடைத்ததற்குப் பில் எழுதி சர்க்காரிடம் கொடுக்கப்பட்டது. சர்க்கார் சுரோத்திரியம் நிலத்தில் தொள்ளாயிரம் கலம் பில் தள்ளி மேலே பில் தரப்புக்கு வாங்கிக் கொண்டு தரப்புக்கும் சுரோத்திரியத்திற்கும் கண்டு முதல் செய்வதற்காக சர்க்காரின் ஒற்றர்களிடம் அனுப்பி தரப்பின் கண்டுமுதலைச் செய்து சுரோத்திரியத்தினைப் பிராமணர்களிடம் விட்டு வைத்து, சுரோத்திரியத்தின் கண்டுமுதலைச் செய்து பிராமணர்களுக்குத் தானம் கொடுங்கள் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டது. அதற்குக் கண்டுமுதல் செய்யும் அவ்விடத்தில் பிராமணர்களுக்கு வந்து கொடுக்காமல் கண்டுமுதல் செய்து தொள்ளாயிரம் கலம் பில்லுக்கு முன்னூற்று முப்பது கலம் என்று ஒற்றர்கள் கூறினர். அந்தத் தானத்தையும் குணபி எடுத்துச் சென்று விட்டான். வில்லேதாரின் மேலுள்ள கெடுபிடியினால் மிகவும் கஷ்டப்படுத்துகிறார்கள். சாஹேப் மனமிரங்கி பிராமணர்களின் வார்த்தைக்குத் தயவு செய்து பாபநாசம் சுபாவின் வில்லேதாரை அழைத்து நகரின் குணபிக்கு ஆணை பிறப்பித்து பிராமணர்களின் சுரோத்திரியம் நிலத்தினை அவர்களிடமே ஒப்படைக்க இசைவாணை வழங்கி மேற்கண்ட பணத்தினைப் பெற்றுக் கொள்ள ஆணை வழங்கி பிராமணர்களைக் காக்க வேண்டுமாய் வேண்டுகிறேன்.

*குணபி – வயல்வேலை செய்யும் ஒருவகை இனம்

வரிசை எண்: **28**

தொகுப்புக் கட்டு எண்: 9
ஆவண எண்: 5I
காலம்: அமர்சிங்

நட்புக் கொண்டவர்களின் பாதுகாவலனாகவும், நட்பிற்குச் சிறந்தவனாகவும் உடைய மேஸ்தர் ஜார்ஜ் அத்ரராம், ரெஸிடெண்ட், தஞ்சாவூர் அவர்களுக்கு, மஹாராஜா இராஜஸ்ரீ அமர்சிங்ஜி ராஜாவின் சலாம். இப்பவும் தாங்கள் ஏப்ரல் மாதம் 19ஆம் தேதி எங்களின் பெயருக்கு எழுதிய கடிதத்தினைப் படித்துப் புரிந்து கொண்டோம். அதில் எங்களுக்கு எழுதிய சந்தோஷமான செய்திக்காக நாங்கள் தங்களுக்கு வந்தனம் செய்கிறோம். ஹானரபில் கோர்ட் டைரக்டர் அவர்கள் எங்கள் மீது இரக்கம் கொண்டு எங்கள் காரியத்தினை நியாயமாக நடத்தினார் என்பது எங்களுக்குத் தெளிவாகப் புரிகின்றது. எங்களது ஆட்சிப் பகுதியில் தாசில்தார் நியமிப்பது பற்றிய காரணத்தினைக் கூறி எழுதியிருந்தீர்கள். ஒப்பந்தத்தின்படி, தாசில்தார் நியமிப்பதற்குச் சம்மதமில்லை என்பதால், நாங்கள் அக்காரியத்திற்காக முழுச் சம்மதம் தெரிவிக்க மாட்டோம். ஹானரபில் கும்பெனியின் தரப்பில் கணக்கு வழக்குகளைப் பார்க்க ஒருவரை வைத்துக் கொண்டு வசூல் முதலானவற்றின் கணக்குகளை அவருக்குக் காட்டினால் தாங்கள் எழுதியபடி, எங்களிடத்தில் கும்பனியின் சாஹேப்புகளுக்குச் சந்தேகமிருந்தால் அது நிவர்த்திக்கப்படும் என்பது உண்மைதான். ஆனால், சம்பா மகசூலில் கொஞ்சம் பாக்கிதான் வசூலாக இருக்கிறது. இச்செய்தி தங்களுக்கும் நன்றாகத் தெரியும். கொஞ்சமுள்ள பாக்கியை வசூலித்து ஒப்பந்தப்படி பங்கு பிரித்தால் ஹானரபில் கும்பனிக்கு குறைந்த பணமே போய்ச்சேரும் என்பதும் தங்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஹானரபில் கும்பனிக்காரர்கள் தங்களுடைய நண்பர்களிடமிருந்து மிகுந்த உதவியைப் பெற வேண்டும் என்று விருப்பமும் அதே வேளையில் எங்களிடமிருந்து கொஞ்சம் பணம் கிடைக்க வேண்டும் என்ற விருப்பமும் கொண்டிருந்தனர். இவ்வாறு செய்வதற்கு எங்களுக்கு விருப்பமில்லை. அதனால் ஒப்பந்தத்தில் எழுதியதைவிட அதிகமான பணம் கும்பனிக்குச் சேர வேண்டும் என்றவாறு, ஹானரபில் கவர்னர் அவர்களுக்கு நல்வழியினைக் காட்டி நாங்கள் எழுதியிருக்கின்றோம். அவரிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். ஹானரபில் கவர்னர் அவர்களின் கடிதத்திற்கு எங்களின் பதிலை எழுதி அதனை இக்கடிதத்துடன் தங்களுக்கு அனுப்பியிருக்கின்றோம். அது அவருக்கு விரைவில் போய்ச்சேருமாறு அனுப்புவீர்கள் என எண்ணுகின்றோம். நட்பின் இடத்தில் அதிகம் எழுத என்ன இருக்கிறது?

'ஸ்ரீராம பிரதாப்'
(சொந்தக் கையெழுத்தில்)

வரிசை எண்: **29**

தொகுப்புக் கட்டு எண்: 3
ஆவண எண்: 13
காலம்: கி.பி. 1799.

மஹாராஜா

பட்டியல் – கி.பி. 1799ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, தஞ்சாவூரில் உள்ள ஹாரைபில் கும்பெனியிடம் ஒப்புவித்தபோது, அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஹிஸ் ஹைனஸ் ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ சத்ரபதி சாஹேப் அவர்களின் பொறுப்பிலும், அதிகாரத்திலும் வைத்துக் கொண்ட ஊர்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றின் உத்தேசமான விவரம்.

		∴புலி ஹோன்
1.	கோட்டை மற்றும் கோட்டையைச் சுற்றிய இடங்கள்.	0
2.	அரண்மனை, தோட்டம் மற்றும் சர்க்காரிலிருந்து சௌபாக்கியவதி மாதோஸ்ரீ பாயிசாஹேப் அவர்கள் அனுபவித்து வரும் மொகாசே ஊர்கள் தொடர்பாக.	26,500
3.	சத்திரங்களுக்காக விடப்பட்ட ஊர்கள் மற்றும் தோட்டங்கள் தொடர்பாக.	26,000
4.	கோட்டைக்குள்ளும், வெளியிலும் இருக்கும் தேவஸ்தானங்களுக்காக விடப்பட்ட ஊர்கள் மற்றும் தோட்டங்கள் தொடர்பாக	1,468 ¾
5.	பாகவத மேளாவிற்காக சுரோத்திரியம்,மிராசி ஊர்கள், கழனி, குடி ஆகியவற்றில் ஐந்தாம் நாளில் ஏற்பட்ட லாபம் தொடர்பாக.	331 ¼
		54,300

குர்னவீஸ் இராமச்சந்திர ஏக்நாத்

சர்க்கேல் ராஜஸ்ரீ ராமோஜி சர்ஜேராவ் காட்கே (ஒப்பம்)

வரிசை எண்: **30**

தொகுப்புக் கட்டு எண்: 3
ஆவண எண்: 16
காலம்: கி.பி. 1799.

பட்டியல் விவரம்: கி.பி. 1799 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் பின்னர் ஹானரபில் கவர்ன்மெண்ட், ஹிஸ் ஹைனஸ் ஸ்ரீமந்த் சத்ரபதிசாஹேப் அவர்களுடைய அனுபவத்திற்காகக் கொடுத்த ஊர்கள், மற்றும் நிலங்களின் உத்தேசமான விவரமும் அவற்றின் கிரயம் முதலியனவும்.

ஹோன் ∴புலி,

1	முக்தம்மாபுரம் அன்னசத்திரம், மற்றும் அதற்குக் கொடுக்கப்பட்ட அரண்மனை, கோயில், தோட்டம், கிணறு கடைத்தெரு, ஜைனக் குடியிருப்பு முதலியவற்றிலிருந்து	5787
	கி.பி. 1806 ஆம் ஆண்டு ஹானரபில் கவர்ன்மெண்ட் கொடுத்த ஊர்கள் 1. தென்னமநாடு 1. கண்ணந்தங்குடி 1. புதூர் 1. வன்னிப்பட்டு இவற்றிலிருந்து	1325
	கி.பி. 1804 ஆம் ஆண்டு சத்திரத்திற்காகக் கொடுக்கப்பட்ட மொகாஸா ஊர் உமையாபுரம் தொடர்பாக.	3699
	கி.பி. 1811 ஆம் ஆண்டு சத்திரத்திற்காகக் கொடுக்கப்பட்ட குணஞ்சேரி ஊர் மற்றும் பல தோட்டங்கள் ஆகியவற்றிலிருந்து	763

		5787
	கி.பி. 1811ஆம் ஆண்டு கடற்கரையில் சர்க்காரின் தோணிகளை வைப்பதற்காகச் செலவு செய்தது — சாளுவநாயக்கன்பட்டினம் என்ற இடத்தில் சிறிது இடம் தொடர்பாக.	50
	தோட்டம், மனைக்கொல்லை, முதலிய புதிய செலவு தொடர்பாக	212

		6049

சூர்நவீஸ் ராமச்சந்திர ஏகநாத் (ஒப்பம்)

சர்க்கேல் ராஜஸ்ரீ ராமோஜி
சர்ஜேராவ் காட்கே (ஒப்பம்)

SECTION IV

MODI DOCUMENTS
IN THE
T.M.S.S.M.LIBRARY
Volume I

SUMMARY IN ENGLISH

Serial No.1

Bundle No. Col.18
Document No.48
Dated 7th October, 1739
Sunday

A deed executed by Rajashri Narasingarao Anandarao Peshwe on behalf of Maharaja Pratapa Simha Raja to H.H.M. Dumas, Governor of the port town Puducherri. This records a mortgage by the King of 33 villages in Tirunallar maghanam in lieu of a loan amount one lakh chakra received form the Governor of Puducherri. The interest free loan amount was received in two installments. This stipulates certain conditions for the return of the loan. It was stipulated that the palace property, the devasthanam and inam lands were to be excluded from the mortgage of the respective villages. It is however said that the payment for the loan could not be made for the last three years as the accounts of villages were not properly made due to insecure conditions and therefore the payment is to be made only from the fourth year by adding the defaulted arrears for those three years along with interest.

Serial No.2

Bundle No. Col.18
Document No.40
Dated 8th October, 1739
Monday

A similar deed executed by Rajashri Narasingarao Anandarao Peshwe on behalf of Maharaja Pratapa Simha Raja to H.H.M. Dumas, Governor of the port town Puducherri, recording the mortgage of 8 villages in lieu of an interest free loan amount of forty thousand chakras received from the Governor of Puducherri through the latter's Vakhil Krishnaji Pant.

Serial No.3 **Bundle No. Col.18**
Document No.47
Dated 18th October, 1739
Thursday

This is a counter part of the above two documents, being a formal letter written to the Accountant of Government of Karaikal by Maharaja Pratapa Simha Raja, informing him about the loan amount of forty thousands chakras received from the Governor of Puducherri and the mortgage of 8 villages in lieu of it .

Serial No.4 **Bundle No. Col.18**
Document No.41
Dated 18th October, 1739
Thursday

A mortgage deed executed by Rajashri Narasingarao Anandarao Peshwe on behalf of Maharaja Pratapa Simha Raja to H.H.M. Dumas, Governor of the port town Puducherri.

This records receipt by the King of Thanjavur for a further loan of sixty thousand chakras from the Governor of Puducherri and the mortgage of the Tirunallar Maghanam comprising thirty three villages in lieu of the loan.

Serial No.5 **Bundle No. Col.18**
Document No.45
Dated 25th December, 1739
Tuesday

A deed executed by Rajashri Narasingarao Anandarao Peshwe on behalf of Maharaja Pratapa Simha Raja to H.H.M. Dumas, Governor of the port town Puducherri in the year 1739 A.D., making the clarification of the terms of agreement executed earlier (Document Serial No.1 & 2). It concerns with the dispute taken to the court of Justice (Nyaya Sabha) regarding one of the mortgaged villages.

Serial No.6

Bundle No. Col. 18
Document No. 46
Dated 31st July, 1740
Thursday

This records the renewal of the above two mortgage deeds for a total loan of one lakh Thanjavur chakras in the year 1740.

Serial No.7

Bundle No. Col.18
Document No.51
Dated 28th August, 1740
Thursday

This is a sale deed given by the King Pratapa Simha Raja Sahib to the Governor of Puducherri H.H.M.Dumas in the year 1740 A.D., regarding the sale of eight villages. The sale price was sixty thousand chakras and it is said that the King received a sum of twenty thousand chakras now after deducting the previous loan amount of forty thousand chakras which he had received by mortgaging the said villages.

Serial No.8

Bundle No.Col.18
Document No.43
Dated 15th November, 1741
Sunday

A mortgage deed of some 15 villages executed by Rajasri Narasingarao Anandarao Peshwe on behalf of Pratapasimha Raje Saheb in favour of the Governor of Puducherry H.H.M. Dumas in the year1741 A.D. in lieu of a loan of forty thousand Thanjavur chakras. The fifteen villages were included in Polandaram Subha of Ahangar pattu.

Serial No.9

Bundle No. Col.18
Document No.44
Dated 15th November, 1741
Sunday

This is a counterpart document of the above mortgage deed written by the Accountant of the Maghan Ahangar pattu. This gives the names of the fifteen mortgaged villages in Polandaram Subha. The produce from the villages were utilised towards the upkeep of Maḥal, Devasthanam and Inam and the balance would be taken for the total loan amount.

Serial No.10

Bundle No.Col.18
Document No.52
Dated 15th November, 1741
Sunday

This is the receipt given by the King of Thanjavur Maharaja Pratapasimha Raje Sahab for a loan amount of forty thousand Chakras taken by him from the Governor of Puducheri (mentioned in the above document).

Serial No.11

Bundle No. Col.18
Document No.42
Dated 9th September,1743
Friday

This is the receipt for a loan of 4,50,000 chakrams taken by Maharaja Rajasri Pratapasimha Raje in 1743 A.D., from Sri Anandarangam Pillai, Savukar of Puducheri. The King promised to pay back the principal and interest amount within the stipulated period.

Serial No.12

Bundle No. Col.16
Document No.21
Dated 24th October, 1761
Saturday

This document records the donation of Srotrium lands to Samji Ananda Subhedar of Chidambaram Pargana and Janardhan Venkaji and Marsamy of Tiruvadi Pacchai mahal by the King of Thanjavur Maharaja Pratapasimha Raje Saheb in 1761 A.D. It is stated that for the maintenance of a Chatram situated at Vazhutur on the bank of new Kollidam river.

Serial No.13

Bundle No. Col.3
Document No.58
Dated 12th September,1773
Sunday

This lists several different heads of payments in hon (and rupees) to be made to the Nawab(of Arcot) by the Thanjavur Kings, in account of ammunitions, maintenance of army, repair works to forts, minting of gold coins e.t.c.

Serial No.14

Bundle No. Col.18 A
Document No.55
Dated 24thDecember,1776
Tuesday

As per the agreement executed between the Thanjavur King Tulaja Raja II and the British, a sum of four lakh Puli- hon is to be paid to the Company's army for protecting the Thanjavur fort. This was given through his descendants namely Govindarao Bhosale, Rasanki Ganapathi Nayak and Japani Keroji Chavhan.

Serial No.15

Bundle No. Col. 4
Document No.54
Dated 22nd December, 1777
Monday

This is a Marathi-Modi translation of the English letter sent by the Governor of Madras to the King Tulaja II asking the latter to pay the stipulated money to Mr. John for the expenditure of company troops.

Serial No.16

Bundle No.112
Sub Bundle No. 43
Year 1777 A.D.

This is a letter written by an Official (to the Palace) as follows:

"The boat owned by the Administrator of Adhirampattinam was sent to Colombu with rice. On its return arecanuts were brought. There was a cyclone and ten men were sent to rescue the boat. In the meantime the Maniyakkara of Kottaipattinam sent four "para" persons to intercept the boat. But the boat was rescued and brought to Sambu Mahadevipattinam. The pirates were also arrested and being watched. Instruction was requested for further action."

Serial No.17

Bundle No. Col.16
Document No.20
Dated 2nd August, 1780
Wednesday

King Tulaja II donated Srotrium lands, an Agrahara with 12 houses with Sri Venugopala Swamy Temple and a Choultry on the bank of the Kollidam river near Valuthur. This was named as Tulajendrapuram. The details of various categories of land in the gifted village are described. It is said that the gift deed has to be received every year.

Serial No.18

Bundle No.943
Document No.74
Dated 26th November, 1783
Wednesday

King Tulaja II donated one veli and three ma of land as his own donation to one Siddhanta Veeraraghava Dhikshitar who is son of Bangaru Dhikshitar, Grandson of Kanchi Veeraraghava Dhikshitar for completing the Navagraha japa on the occasion of the pinda- parihartha ceremony in the village of Divelkadi near Tiruppanthuruthi in the Tiruvadi Subha.

Serial No.19

Bundle No.86
Document No.6
Dated 23rd February, 1789
Monday

This is an order during the period of Amersingh to enhance the land assessment of the villages paying less than 40 kalams (per veli). The details are given in this document.

Serial No.20

Bundle No. Col. 20
Document No.3
Dated 13th January, 1791
Monday

This is a letter from King Amersingh addressed to the Governor of Chennapatnam, Sir Charles Vocali Bahadur.

King Amersingh received a letter from the Governor through Rev. Schwartz on 28th December, 1790. As per the letter the King'Sirkel Sivarao had to reach the city(Chennapatnam) for giving a sworn statement. The King assured to act accordingly and remain faithful to the Governor.

Serial No.21

Bundle No.Col. 3
Document No.66
Dated 21st April, 1794
Monday

This is a Correspondence between Rev. Schwartz and Dattajirao an official of King Serfoji II. Dattaji informed to Schwartz as follows:

Mathosri Mohanabai Saheb had returned from Kalahasti via Kanchi. She was now preparing for conducting a marriage. But Yajaman Saheb(the King) did not tell anything. The Governor sent a message and asking for 15,000 kaledon and the Senior Bai Saheb felt much about that. A letter was sent to the Government along with the translation explaining the situation. The Company paid three hons to them.

The Yajaman Saheb had a meeting with the third Councilor Mr. Vasangate accompanied with Mr. Jerrick. Yajaman Saheb was learning English and maintaining accounts in English. Dattaji did not receive any letter from Bengal. Amersingh used to go to Trichy and Srirangam. They were expecting his reply with more advice.

Serial No.22

Bundle No. Col. 4
Document No.59
Dated 29th April, 1794
Tuesday

A letter correspondence between Serfoji Rajah and Rev. Schwartz. Tattaji Appa has writen this letter on behalf of Serfoji. He mentioned about the correspondence between Serfoji and the Governor through Mr. Jerrick. The Governor agreed to receive fifteen thousand kaledon and issue two thousand five hundred hons to Serfoji. This was also informed to Mathosri younger Baisaheb. Bai Saheb expressed her wish to arrange marriage of Serfoji with the daughter of Kerana Bhosale. But Serfoji postponed the marriage. Sister Neelaveni had gone to Thanjavur

with her son Venkatasamy who came yesterday. A request was made for materials for the marriage ceremony. On 23rd of this month two ships came with some utensils and Colonel Istoot. As the expenditure was more they were thinking to send a man to Sivaraya. Annaji Pant will explain this. If the elder Baisaheb refused to receive the sum of two thousand and five hundred hons shall we receive it or not? Further details will be sent to you later on.

Serial No.22 A

Bundle No. 104
Document No. 1
Period : Amersingh

This is also a letter written by Dattaji Appa on behalf of the King Serfoji II. Dattaji addressed to Bapanna Swami an Official of Thanjavur Kingdom. The Pathakriis of Papanas, Bapanna who had committed some mistake was removed from service and the person who was looking after there at that time should continue. This should be followed only with the knowledge of Padari Saheb (Rev. Schwartz).

Serial No.23

Bundle No. Col. 4
Document No.58
Dated 8th June, 1794
Sunday

This is also a letter from Serfoji II to Rev. Schwartz through Dattaji Appa. The letters in Marathi and their translations in English dated 5th June which were sent to Bengal were received by Serfoji II and they were ready to send to the Governor. Two thousand and five hundred hons kept in Mr. Jerrick'Secretary house were brought to the Palace. When the elder Baisaheb was asked to get it, the brother of Mohana Bai Muthoji Ingle was not feeling well and she wanted to go to Thanjavur. She did not inform about her travel. She was instructed by Dattaji Appa not to go to Thanjavur without getting permission from the Governor. But She did not listen to them. So Rev. Schwarz was asked to send his opinion to Serfoji II.

Serial No.24

Bundle No.Col. 4
Document No.57
Dated 12th June, 1794
Thursday

This is the fourth letter in this series written by Dattaji Appa on behalf of Serfoji II to Rev. Schwartz and refers to an earlier letter written on 8th June. Mathosri Younger Baisaheb wanted to meet her brother at Thanjavur and send message to her relatives. Dattaji Appa obstructed her relations from meeting her. The next day, on Monday letters were sent to the Governor of Bengal and the copies were given to Mr. Jerrick.. The Governor did not want to permit the Younger Baisaheb to go out. If she tried to go, then King Serfoji would be given power to order the Subhedar of Fort not to allow their palanquin or her relatives inside. This was informed to Baisaheb. She refused to take food and ordered Dattaji to bring palanquin. When Dattaji refused, he was asked to take Baisaheb's servant to Mr.Jerric. Their servants were also instructed by the same way. So, Baisaheb did not take food and Serfoji compromised her. Venkatasamy got two hundred chakras from Baisaheb and went to Thanjavur yesterday for the marriages of the son and daughter of sister Neelaveni. The son of Mr. Jerrick came here from north and returned to his native place. Mr.Jerrick was so sad because he did not receive any letter from his son after twenty days of his departure. Serfoji II and Baisaheb were doing well. We have two thousand and five hundred hons instead of materials. Letter sent on 12th June, 1794.

Serial No.25

Bundle No. Col. 16
Document No.16
1794 A.D.(Water mark)

Kumbakonam Subha – Panthanallur Pathak – Manamedu Maghan - details of Devasthanams.

Only two of the six temples receive moin grant from the Government. The other four Temples have to get income from the sale of usufructs of trees and conduct puja and neivedya. The Temple Kamavishi Namasivayam Pillai showed the bills of Temple expenditure. He could not get the amount from the temple. The Sarvamanyam was shown as half and the accounts settled for that. This created a

quarrel. Finally, to adjust the amount, utensils in the temple were sold. Because of this, conducting puja and neivedya was a problem. Hence itb is requested that a sarvamanya grant be made to the temples.

Serial No.26

Bundle No. Col. 4
Document No.39
Dated 23rd May, 1795
Saturday

This is a petition by the Authorities of Sri Naganatha Swami Temple (to the King enumerating several money payments that had to be given to the temple by the people of Anakkudi Pathak for various reasons.

Serial No.27

Bundle No. Col. 16
Document No.15
Year 1796 A. D.

This is a petition of Venkateshwara Sastri and Kameshwarayya submitted to the Kin Amersingh in the year 1796 A.D., regarding a Srotrium land of theirs situated in Amrutaveli in Uttukadu division in Merattur Pattu of Tiruvadi Subha. They could not enjoy their srotrium due to the high handed activities of some officials. They requested the King to help them in this matter.

Serial No.28

Bundle No .Col.9
Document No.51
Amersingh(1791-1798A.D.)

This letter was written to the Resident of Thanjavur by Amersingh Rajah objecting to the appointment of Tahsildar inside the Fort area by the Company. He mentioned that he had also written a letter to the Governor regarding this explaining the unfair treatment meted to him in spite of his good intentions towards the Company's Government.

Serial No.29

Bundle No. Col. 3
Document No.13
Year 1799 A.D.

When an agreement was signed between the British and King Serfoji II, some villages and lands were retained by the King for his own use. They are the following:

	Phuli Hon
1. Fort and the surroundings of Palace	0.00
2. Palace, Gardens and Mokasa Villages of Baisaheb	26,500.00
3. Lands and Villages alloted to Annachatrams	26,000.00
4. Lands and Villages alloted to Devasthanams in and around Fort	1468.75
5. Srotrium Lands, Mirasi Villages, Kalani, Kudi etc., allotted for Bhagavat mela.	331.1/4
	54,300.00

Serial No.30

Bundle No. Col. 3
Document No.16
Year 1799 A.D.

After the agreement of 1799 A.D. the British Government granted some villages and lands for the maintenance of H.H.Serfoji Rajah. Their names and their income are given in this document.

	Phuli Hon
1. Income from Muktammapuram Annachatram, the Chatram Palace, Temple, Garden, well, Market and Jain settlement	5787

1. Income from the villages given by the Government in the year 1806 A.D.	
1. Tennamanad 1.Pudur	
1. Kannathangudi 1. Vannipattu	1325
1. Income from the Mokasa village Umayalpuram given for the Annachatram in the year 1804 A.D.	3699
1. Income from the village Koonancheri and other Gardens given to Annachatram.	763
	5787
1. Expenditure towards keeping boats in the sea-shore of Saluvanayakan Pattinam in 1811 A.D.	50
1. Expenditure on Gardens, House, Land etc.	212
	6049

(SARASVATI MAHAL LIBRARY PRESS, THANJAVUR)